# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2024
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2024**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 18

## பேச்சுப்போட்டி - மேற்பிரிவு
(பிறந்த திகதி: 01.07.2012 - 30.06.2014)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## தளர்வறியா மனம் வேண்டும்!

நம் வாழ்வில் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தளர்வென்பதை நாம் அறியமாட்டோம். ஆனால் வெற்றியும் தோல்வியும் கலந்தது தானே வாழ்க்கை? இன்பத்தைக் கண்டு மகிழும் நாம், துன்பத்தைக் கண்டு துவண்டு போகலாமா? மனம் தளர்ந்து போனால், பின் மார்க்கம் காண்பது எப்படி?

முயற்சி தளர்ந்து விட்டால் சோம்பல் குடி கொண்டு விடும். ‘முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்’ என்கிறார் வள்ளுவர். முடியாது என்று முடிவு செய்ய முன்னர் முயற்சி செய்து பார்க்க வேண்டும். முடிந்து போன ஒன்றை நினைத்து வருந்தக் கூடாது. உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் மீண்டும் முயல வேண்டும். சறுக்கினாலும், அதை ஒரு ஒரு சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும். படிப்பிலோ, விளையாட்டிலோ எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் போகலாம். வாழ்க்கையில் வரும் தோல்விகளைக் கண்டு அச்சம் கொள்ளக் கூடாது. தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏமாற்றம் ஏற்பட்டால், அதை ஏற்கப் பழக வேண்டும்.

தளராத உறுதியும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே வெற்றிக்கான படிக்கற்கள். நல்லது என்று நம்புவதை முடிக்கும் தளராத மனம் எமக்கு இருக்க வேண்டும். இதையே ‘திண்ணிய நெஞ்சம் வேண்டும்’ என்கிறார் பாரதியார். தெளிவான நோக்கமும், அதை செயற்படுத்தும் திட்டமும் இருந்து விட்டால் போதும், எதையும் சாதித்து வெற்றி காணலாம்.

தளர்வறியா மனம் கொள்வோம்! வரும் தடைகளைத் தகர்த்திடுவோம்!

நன்றி, வணக்கம்.